# பத்திரிகையாளர் நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்ப்பு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பதிலுரை

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

## எழுது பொருள் - அச்சுத்துறையில் பணியாற்றுபவர்களுக்கு புதிய குடியிருப்புகள்!

## கணியன் பூங்குன்றனார் - கபிலருக்கு நினைவுத் தூண்!

இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதியை உருவாக்க கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 5 கோடி வழங்கப்பட்டுள்ளது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு நான்காண்டுகளில் நல்கை மானியமாக ரூபாய் 22 கோடி வழங்கப்பட்டுள்ளது. அந் நிறுவனத்தில் முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.5,000/-ம், முதுகலை தமிழ் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.2,000/-ம், சுவடிப் பட்டய மாணவர்களுக்கு ரூ.3,000/-ம் மாதந்தோறும் ஆய்வு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும், ஓமரின் 'இலியட்' மற்றும் 'ஒடிசி' ஆகிய கிரேக்க காப்பியங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, வெளியிடப்பட்டது.

**உலக கவிஞர் மாநாடு!**

மதுரையில் உள்ள உலகத் தமிழ்ச் சங்கத்தின் பணிகள் சிறப்பாக நடைபெறும் வகையில், கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 6 கோடி வழங்கப்பட்டுள்ளது. உலகத் தமிழ்ச் சங்கத்தின்மூலம் கடந்த நான்காண்டுகளில் 65 தமிழ்க்கூடல் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் "உலக கவிஞர் மாநாடு" கடந்தாண்டில் நடத்தப்பட்டது.

கடந்த நான்காண்டுகளில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு நல்கை தொகையாக 129 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பண்பாட்டு மரபுகள், தமிழ் மண்ணின் மரபுக் கலைகளை மீட்டெடுத்தல், நாட்டுப்புறவியல் அருங்காட்சியகம் உள்ளிட்ட திட்டப் பணிகளுக்கு கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் மறுமதிப்பீட்டிற்கு உட்படுத்தி உயர் புள்ளிகளைப் பெறும் வகையில், ரூபாய் 2 கோடி வழங்கப்பட்டுள்ளது. சமீபகாலத்தில், சில பேர் தமிழுக்கு என்ன செய்தார்கள், என்ன செய்தார்கள் என்று புலம்புவோர் மத்தியில்,

'தொண்டு செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
துடித்தெழுந்தே!'

என்றுரைத்த பாவேந்தரின் உன்னத உணர்வுகளுக்கு ஏற்றவாறு தமிழுக்கு தொண்டாற்றி வருகிறார் முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோரிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கைகள் என்று பார்க்கிறபோது, இன்றைக்கு அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள், தமிழறிஞர்கள் மற்றும் எல்லைக் காவலர்கள் ஆகியோருக்கு உதவித் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் அதற்கான வாய்ப்பினைத் தந்திருக்கிறார்கள். அது அறிவிப்பின்போது வெளியிடப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**செய்தித்துறை!**

செய்தித் துறையினுடைய பதிலுரைக்கு நான் வருகிறேன். உறுப்பினர்கள் பேசுகிறபோது, செய்தித் துறையின்மீது இன்றைக்கு பல்வேறு கருத்துகள் இங்கே எடுத்து வைக்கப்பட்டுள்ளன. நிச்சயமாக, என்னுடைய பதிலுரையிலே அதற்கான பொருள் அடங்கும் என்று நான் கருதுகிறேன்.

**பத்திரிகையாளர் மன்றத்தில் உட்கட்டமைப்பு மேம்பாடு!**

கடந்த 6-4-2025 அன்று சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் நடைபெற்ற மன்றத்தின் நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு, பத்திரிகையாளர் மன்றத்தில் உட்கட்டமைப்பை மேம்படுத்திட அரசின் சார்பில் இரண்டரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று முதலமைச்சர் அவர்களின் சார்பிலே அறிவித்திருக்கிறார்கள். அதற்காக பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களின் சார்பாக எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையை பொறுப்பேற்றவர், ஒரு சிறிய ஒப்பீடு செய்ய விரும்புகிறேன். அதாவது, கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 22 மணிமண்டபங்கள்.

4 திருவுருவச்சிலைகள். 2 நினைவுச் சின்னம். 1 நினைவுத்தூண். 1 அரங்கம் என மொத்தம் 30 மட்டுமே அமைக்கப்பட்டது. ஆனால், முதலமைச்சர், அண்ணன் தளபதி அவர்களுடைய அரசு, திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, 3 அரங்கங்கள், 8 மணிமண்டபங்கள், 28 சிலைகள் என ஏறத்தாழ 39 திறந்து வைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பத்தாண்டுக்கால ஆட்சியில் 30 அமைக்கப்பட்டது. இந்த நான்காண்டுகளில் 39 நிகழ்ச்சிகள் திறப்பு விழா கண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதில் கடந்த ஆண்டில் மட்டும் சிவகங்கை மாவட்டம், நகரப்பட்டியில் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடிய மாவீரன் வாளுக்குவேலி அம்பலம் திருவுருவச் சிலையும், சிவகங்கை மாவட்டம், சூரக்குளத்தில் வீரத்தாய் குயிலி திருவுருவச் சிலையும், தென்காசி மாவட்டம், நெற்கட்டும்செவல் கிராமத்தில் வெண்ணிகாலாடி திருவுருவச் சிலையும், சென்னை எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் சர் ஜான் ஹூபர்ட் மார்ஷல் திருவுருவச் சிலையும், விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் மேனாள் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி நினைவாக திருவுருவச் சிலையுடன்கூடிய அரங்கமும், 1987 ஆம் ஆண்டு துப்பாக்கிச் சூட்டில் பலியான 21 சமூக நீதிப் போராளிகளுக்கு மணிமண்டபமும்,

ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் கீழ் பவானி அணை அமையக் காரணமாக இருந்த தியாகி ஈஸ்வரன் அவர்களுக்கு அரங்கமும், திருவுருவச் சிலையும், திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை சுதந்திரப் போராட்ட வீரர் தளிபாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்ப நாயக்கர் அவர்களுக்கு திருவுருவச் சிலையும், அரங்கமும், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் தெய்வீகத் திருமகனார் முத்துராமலிங்கத் தேவர் நினைவிட முகப்பில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அரங்கமும், வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில், கேரள மாநிலம் வைக்கத்தில் உள்ள ஐயா பெரியார் நினைவிடம் மேம்படுத்தப்பட்டு, அங்கு நூலகமும் சிறப்பாக அமைக்கப்பட்டு, அரங்கமும் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞரின் கைவண்ணத்தில் சென்னையில் அமையப்பெற்ற வள்ளுவர் கோட்டம் ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) விரைவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் நிறுவப்பட்டுள் வீரமங்கை இராணி வேலு நாச்சியார் சிலை உட்பட ஏறத்தாழ 12 சிலைகள் இன்றைக்கு திறக்கப்பட உள்ளது. அதே நேரத்தில் 7 சிலைகள் அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் துவங்கியுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். சிவகங்கை மாவட்டம், சிராவயலில் உத்தமர் காந்தியடிகள் - ஜீவானந்தம் சந்திப்பின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள அரங்கம் உட்பட 12 அரங்கங்கள் திறக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. அதேபோல PAP திட்டம் இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்கள். இன்றைக்கு சொன்னால் அதற்கு நேரம் போதாது. எனவே, அந்த வகையில் இந்தத் திட்டங்கள் எல்லாம் விரைவாக, அந்த அரங்கம் எல்லாம் திறக்கிறபோது நிச்சயமாக செய்தி அறிந்துகொள்கிற வாய்ப்பு அனைவருக்கும் ஏற்படும்.

**முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்!**

உலகமே வியந்து போற்றுகின்ற வகையில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் நினைவிடத்தை நாளது வரை ஏறத்தாழ 56 இலட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர். இந்நினைவிட வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை சித்தரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள, "கலைஞர் உலகம் அருங்காட்சியகம்" நாளது வரை சுமார் 5 இலட்சம் வரை பார்வையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையில் 43 தலைவர்களுக்கும், பிற மாவட்டங்களில் 90 தலைவர்களுக்கும் என மொத்தம் 133 தலைவர்களுக்குப் பல்வேறு இடங்களில் அன்னாரின் திருவுருவச் சிலைகளுக்கு ஆண்டுதோறும் மாலை அணிவித்தும், மலர்கள் தூவியும் மரியாதை செய்கின்ற நிகழ்ச்சி அரசின் சார்பிலே நடந்து வருகிறது. கடந்த நான்காண்டுகளில் மட்டும் புதிதாக 15 அரசு விழாக்கள் கழக அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**பத்திரிகையாளர் நலவாரியம்!**

முதலமைச்சர் ஆணையின்படி அமைக்கப்பட்ட பத்திரிகையாளர் நல வாரியத்தின்மூலம் 21 வகையான நலத்திட்ட உதவிகளும், இன்று வரையில் 3,400 பத்திரிகையாளர்களுக்கு உறுப்பினர் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட பணிக்கொடை மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பு ரூபாய் 3 இலட்சத்தில் இருந்து ரூபாய் 4 இலட்சமாக உயர்த்தப்பட்டு உள்ளது. பத்திரிக்கையாளர் ஓய்வூதியம் மாதம் ரூபாய் 10 ஆயிரத்தில் இருந்து ரூபாய் 12 ஆயிரமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூபாய் 5 ஆயிரத்தில் இருந்து ரூபாய் 6 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. குடும்ப நல நிதியத்தில் இருந்து வழங்கப்படும் மருத்துவ உதவித்தொகை ரூபாய் 2 இலட்சத்தில் இருந்து ரூபாய் இரண்டரை இலட்சமாக உயர்த்தப்பட்டு உள்ளது. பணிக்காலத்தில் இயற்கை எய்த நேரிடும் பத்திரிகையாளர்களுக்கு, குடும்ப உதவி நிதியாக 5 ஆண்டுக்காலம் பணிபுரிந்தோருக்கு ரூபாய் இரண்டரை இலட்சமும், 10 ஆண்டுக்காலம் பத்திரிக்கையில் பணிபுரிந்திருந்தால் ரூபாய் 5 இலட்சமும், 15 ஆண்டுகாலம் பணிபுரிந்தோருக்கு ரூபாய் 7 இலட்சத்து 50 ஆயிரமும், 20 ஆண்டுகளுக்குமேல் பணிபுரிந்திருந்தால் ரூபாய் 10 இலட்சமும் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அது நடைமுறையில் இருக்கிறது.

**சமூக ஊடகப் பிரிவு!**

தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற நாளிலிருந்து, செய்தி மக்கள் தொடர்புத் துறை நவீன தகவல் தொடர்பில் முக்கிய அங்கமான சமூக ஊடகங்களில் தனித்துவமான கணக்குகளை தொடங்கி, முதல்வர் மற்றும் அரசின் அறிவிப்புகள், செயல்திட்டங்கள், புகைப்படங்கள் மற்றும் சாதனைகளை எளிமையாக மக்களிடம் சேர்க்கும் நோக்கத்தில் "சமூக ஊடகப்பிரிவு" செயல்பட்டு வருகிறது. இத்துறையின் சார்பில் கட்செவியில் புதிதாக சேனல் ஒன்று தொடங்கப்பட்டு, நாள் ஒன்றுக்கு 91 ஆயிரம் பேருக்கு, அரசின் செய்திகள் கொண்டு சேர்க்கப்படுகிறது என்பதையும் இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல அரசின் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்கிறபோதும், வேளாண் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்கிறபோது மட்டுமல்லாமல் அனைத்து மானியக்கோரிக்கையின் முக்கிய அம்சங்கள் உடனுக்குடன் சமூக வலைதளங்களின் வாயிலாக எளிய முறையில் மக்களுக்கு சென்று வகையில் செய்தித் துறை விரைவாக அந்தப் பணிகளை செய்து வருகிறது.

**கலைஞர் எழுதுகோல் விருது!**

அதேபோல பொருட்காட்சியம், தமிழ்நாட்டில், ஆண்டுதோறும் 10 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில், மற்ற பகுதிகளில் சுழற்சி முறையில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகிறது. அந்த வகையில் ஏறத்தாழ கடந்த ஆண்டு மட்டும் 5,57,000 பேர் அதை பார்வையிட்டிருக்கின்றார்கள். இதில் அரசுக்கு ஏறத்தாழ ரூபாய் 1 கோடி வருமானம் கிடைத்தது. அதேபோல தனியார் பொருட்காட்சிக்கு அனுமதி வழங்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களுடைய பொது நிவாரண நிதிக்கு ரூபாய் 10 கோடியே 71 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது. அதேபோல செய்தித் துறையின் மூலமாக பல்வேறு விருதுகள். குறிப்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் 'கலைஞர் எழுதுகோல் விருது' இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றி வரும் ஒரு சிறந்த இதழியலாளருக்கு 2021 ஆம் ஆண்டு முதல் 'கலைஞர் எழுதுகோல் விருது' வழங்கப்படுகிறது. அந்த வகையில் முதல் முறையாக. ஐ.சண்முகநாதன் அவர்கள், வி.என்.சாமி அவர்கள் அதேபோல இந்த ஆண்டு 2023 ஆம் ஆண்டிற்கான விருது நக்கீரன் கோபால் அவர்களும் திருமதி. சுகிதா சாரங்கராஜ் அவர்களும் பெற்றிருக்கிறார்கள். 2024 ஆம் ஆண்டு விருதாளருக்கான தேர்வு விரைவிலே நடைபெற இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் 2022 ஆம் ஆண்டு முதல் 'கலைஞர் கலைத் துறை வித்தகர் விருது'...

ஐயா, கலைஞர் கலைத் துறை வித்தகர் விருது திரைப்பட வசனகர்த்தா ஆரூர்தாஸ் அவர்களுக்கும், கவிஞர் மு. மேத்தா மற்றும் திரைப்படப் பின்னணிப் பாடகி திருமதி பி. சுசீலா அவர்களுக்கும் முதலமைச்சர் அவர்களால் விருதுகள் வழங்கப்பட்டது.

**திரைப்பட விருதுகள்!**

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடந்த 10 ஆண்டுக்கால ஆட்சியில் வழங்கப்படாமல் இருந்த திரைப்பட விருதுகள், சின்னத்திரை விருதுகள் மற்றும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படக் கல்லூரி மாணவர் விருதுகள் உட்பட அனைத்து விருதுகளும் கழக ஆட்சி அமைந்த உடன், முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்கள் ஆகியோரின் வழிகாட்டுதலின் அடிப்படையில் 7 ஆண்டுகளுக்கான விருதுகள், நடுவர்கள் நியமிக்கப்பட்டு, ஏறத்தாழ 353 விருதாளர்களுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தொடர்ச்சியாக வழங்க வேண்டிய விருதுகளுக்கான நடுவர்கள் குழு அமைக்கப்பட்டு, தேர்வு நடைபெற்று வருகிறது. விரைவிலே, ஜூலை மாத இறுதிக்குள் இந்த விருதுகள் அனைத்தும் வழங்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல, தமிழ்நாடு எம்.ஜி. ஆர். திரைப்பட மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின்மூலம், இன்றைக்கு அந்த வளாகத்தில் தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய மூன்று படப்பிடிப்புத் தளங்கள் சுமார் ரூ.40 கோடி மதிப்பீட்டில், முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் நடைபெற்று வருகின்றன.

அதேபோல, திருவள்ளூர் மாவட்டம், குத்தம்பாக்கத்தில் திரைப்பட நகரம் அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்றுவிக்கப்படும் பாடப்பிரிவுகளை ஒருங்கிணைத்து, குறுகிய கால பாட வகுப்பு தொடங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தமிழரசு மாத இதழ்!**

இவையில்லாமல், இன்றைக்கு முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்களால் 1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, சுமார் 55 ஆண்டுகளாக அரசினுடைய செய்திகளை மக்களுக்கு மாதந்தோறும் எடுத்து சொல்லக்கூடிய "தமிழரசு" மாத இதழுக்கு கடந்த 2021 ஆம் ஆண்டு வரை, இந்த அரசு பொறுபேற்பதற்கு முன்புவரை சுமார் 30,000 நபர்கள்தான் உறுப்பினர்களாக இருந்தார்கள். அன்றைக்கு சந்தாதாரர்களாக இருந்தார்கள். இந்த அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு துறை எடுத்த நடவடிக்கையின் காரணமாக சந்தாதாரர்களின் எண்ணிக்கை 1 இலட்சத்தை கடந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**4 ஆண்டு சாதனை மலர்!**

கடந்த நான்காண்டுகளில் தமிழரசு அச்சகத்தினை நவீனமயமாக்கும் பொருட்டு ரூபாய் 1 கோடியே 80 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழரசு வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் 54 சிறப்பு வெளியீடுகளை இந்த தமிழரசு வெயிட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா மலர் வரை இன்றைக்கு 54 சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. விரைவில் நான்காண்டு சாதனை மலரும் முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட உள்ளது. திரைப்படத் துறையினர் நல வாரியத்தில் தற்போது 39 சங்கங்களைச் சார்ந்த 27,283 உறுப்பினர்களுக்கு 22 வகையான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இன்றைக்கு இதுபோன்ற பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்கள் திரைத்துறை மற்றும் சின்னத்திரையில் பல்வேறு நிலையில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலன் கருதி செங்கல்பட்டு மாவட்டம், பையனூரில் அரசின் சார்பில் 90 ஏக்கர் நிலம் அவர்களுக்கு குடியிருப்புகள் அமைப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது. இந்நல வாரியத்தின் மூலமாக நிதி ஆதாரத்தினை அதிகரிக்க படப்பிடிப்பு கட்டணத்தில் இருந்து 50 சதவிகிதம் வாரியத்திற்கு வழங்கப்படுகிறது. இவ்வாறான பல்வேறு பணிகள் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெற்று வருகிறது.

**எழுதுபொருள் - அச்சுத்துறை!**

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் பதிலுரை.

193 ஆண்டுகள் பழமையான எழுது பொருள் மற்றும் அச்சுத் துறையின் தலைமையிடம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. அதன் கிளை அச்சகங்கள் புதுக்கோட்டை, விருத்தாசலம், திருச்சி, சேலம், மதுரை ஆகிய 5 இடங்களில் கிளை பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. தற்போது முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் அடிப்படையில், திருப்பூரில் ஆறாவது கிளை துவங்கி கடந்த ஒரு வாரமாக அது செயல்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வச்சகத்தின்மூலம் கோயம்புத்தூர், நீலகிரி, திருப்பூர், ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த அரசு அலுவலகங்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறுவர்.

சென்னை, தண்டையார்பேட்டை, காமராஜர் நகரில் எழுதுபொருள் அச்சுத் துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு நவீன வசதிகளுடன்கூடிய 96 புதிய குடியிருப்புகள் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் துணை முதலமைச்சர் அவர்களால் குடியிருப்பு கட்டுமானப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன. தற்போது அப்பணிகள் நிறைவடையும் நிலையில் இருக்கின்றன. விரைவில் அது திறக்கப்பட இருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையை நவீனமயமாக்கும் வகையில் ரூபாய் 13 கோடியே 40 இலட்சத்தில் அச்சு இயந்திரங்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் நிறுவப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கடந்த நிதியாண்டில் மட்டும் ரூபாய் 23 கோடியே 74 இலட்சம் வருவாய் ஈட்டியிருக்கிறது. ரூபாய் 5 கோடியே 22 இலட்சம் மதிப்பில் பொதுத் தேர்தல் துறைக்கு அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நான்காண்டு காலத்தில் அச்சுக் கட்டணம்மூலம் ரூபாய் 81 கோடியே 75 இலட்சமும், பெயர் மாற்றம் மற்றும் பெயர் திருத்தம் செய்ததன்மூலம் ரூபாய் 7 கோடியே 40 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் மட்டும் பெயர் மாற்றம் செய்ய, பெயர் திருத்தம் செய்ய 33,000 நபர்கள் விண்ணப்பித்து, அவர்கள் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அது நிறைவு செய்யப்பட்டு, அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன.

மூன்றாம் பாலினத்தவர் பெயர் திருத்தம் மற்றும் பெயர் மாற்றம் செய்வது குறித்து கட்டணம் ஏதுமின்றி அரசிதழில் வெளியிடப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன். கால மாற்றத்திற்கேற்ப நவீன அச்சு இயந்திரங்களைக் கொண்டு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள், அனைத்து அரசுத் துறைகளுக்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள், கொள்கை விளக்கக் குறிப்புகள், சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகள் ஆகியவை உயர்தரத்தில் இத்துறையின்மூலம் அச்சிட்டு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாண்டு முதல், தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனத்திற்கு தேவையான பாடநூல்களை அச்சிடுவதற்கான நடவடிக்கையில் இறங்கவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார். அதற்கான முயற்சி நடைபெற்று வருகிறது. இதற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்துடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை மீதான எனது பதிலுரையை வழங்கியிருக்கின்றேன். இந்த மூன்று துறைகளின் சார்பாக பணியாற்றி, எங்களுக்கெல்லாம் பல்வேறு ஆலோசனைகள் வழங்கிய அரசு தலைமைச் செயலாளர், முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள், அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), ஆணையர், எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), இயக்குநர், செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), இயக்குநர், தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் இந்த நேரத்திலே எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), ஆகிய மானியக் கோரிக்கை சார்பாக மாமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளீர்கள். ஏறத்தாழ, தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), மானியக் கோரிக்கையின்மீது 98 வெட்டுத் தீர்மானங்களும், செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கையின் மீது 120 வெட்டுத் தீர்மானங்களும், எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கையின் மீது 75 வெட்டுத் தீர்மானங்களும் வரப்பெற்றுள்ளன. இன்றைக்கு அந்தத் தீர்மானங்களை எல்லாம் படித்து பார்த்திருக்கிறேன். அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் படிப்படியாக நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பதிலுரையிலும் உறுப்பினர்களுடைய கோரிக்கைகள் நிச்சயமாக நிறைவேறும். குறிப்பாக, இன்றைக்கு அறிவிப்புகள் வெளியிடுகிறபோது அவர்களுடைய கோரிக்கைகள் முழுமையாக நிறைவேறும் என்று கருதுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பதிலுரை வழங்கினார்.





கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பிற்கிணங்க துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டலின்படி போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தி உறுதிமொழி எடுத்தார். உடன் சுபா. சந்திரசேகர், க.சொ.க.கண்ணன் எம்.எல்.ஏ., எம்.பி.பாலசுப்ரமணியன், மு.கணேசன், சி.சந்திரசேகர், லதாபாலு, கு.இராஜேந்திரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



கிருஷ்ணகிரியில் மீனாட்சி மஹாலில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளையொட்டி நடைபெற்ற சமத்துவ நாள் நிகழ்ச்சியில் 1,699 பயனாளிகளுக்கு ரூ. 13 கோடியே 51 லட்சத்து 45 ஆயிரத்து 665 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மரு.மாலதி நாராயணசாமி , கிருஷ்ணகிரி நகராட்சி துணை தலைவர் சாவித்திரி கடலரசு மூர்த்தி உள்ளிட்ட பலர் உள்ளனர்.